## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 30/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் **02** -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 02.12.2024**

**பெயர் - முகமது சாதிக்**

**த/பெ - அப்துல் ஜலிக்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- .12.13 பி.எம்.**

**குறக்கு விசாரணை -**

1. யார் மீது இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாபுலால் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பாபுலாலை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் என்னுடைய இடத்தில் 288 சதுர அடி அவர் எடுத்துக்கொ்ணடதால் வழக்கு தாக்கல் செய்தேன். வேறு எந்த பரிகாரமும் வழக்கில் கோரவில்லையா என்றல் இல்லை. நான் எங்கு வசிக்கிறேன் என்றால் ஆயிரம் விளக்கு பகுதியில் வசிக்கிறேன். பாபுலால் எங்கு வசிக்கிறாா் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் அத்திப்பட்டில் உள்ளது. வழக்கு சொத்தின் சா்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சா்வே எண் 258/1 ஆகும்.மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 1411 சதுர அடி ஆகும்.

2. யாரிடம் இருந்து வழக்கு சொத்தை வாங்கினேன என்றால சலிம மற்றும் கலிலுல்ரகுமானிடமிருந்து வாங்கினேன். எப்போது வாங்கினேன் என்றால் 2018-ல் வாங்கினேன். வழக்கு சொத்தின் 4 எல்லை விவரங்கள் தெரியுமா என்றால் சரியாக தெரியாது. பிரதிவாதி டிரஸ்டா என்றால் ஆமாம். டிரஸ்டிற்குரியது கல்யாணசத்திரமா என்றால் ஆமாம். அது 6

கிரவுண்ட் ஆகும். மேற்படி கல்யாண சத்திரம் வழக்கு சொத்தின் மேற்கு பகுதியில் உள்ளது என்றால் சரிதான். இடத்தை வாங்கும் போது 4 பக்கமும் அளந்து பார்த்து வாங்கினேனா என்றால் ஆமாம். நான் வாங்கிய பிளாட்டின் எண் என்ன என்றால் 5 ஆகும். வழக்கு சொத்து இருக்கும் நகரின் பெயர் பத்மாவதி நகரா என்றால் ஆமாம்.

3. மேற்படி அதே பத்மாவதி நகரில் பிரதிவாதி வழக்கு சொத்திறகு மேற்கு பக்கத்தில் உள்ள கல்யாணமண்டபத்தை வாங்கினார்கள் என்றால் ஆமாம். வழக்கு சொத்து காலி இடமா என்றால் ஆமாம். மேற்படி வழக்கு சொத்தினை வாங்கிய உடன் அதனை சுற்றி வேலி அமைத்துள்ளேனா என்றால் அமைத்தேன். ஆனால் அதை பிரதிவாதிகள் பிடிங்கி எரிந்துவிட்டனர். வழக்கு சொத்தினை சுற்றி சுற்றுச்சவர் அமைத்தேனா என்றால் இல்லை. கற்களை மட்டுமே அடிக்கி வைத்தேன். வழக்கு சொத்தினை நான் வாங்கும்போது வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் பிரதிவாதிகளால் சுற்றுசுவர் ஏற்கனேவே எழுப்பப்பட்டு இருந்ததா என்றால் இல்லை. நான் அமைத்த வேலியை பிடிங்கிப்போட்டு அவர்கள் சுற்றுச்சுவர் எழுப்பினர். வழக்கு சொத்தின் கிழக்குப்பக்கம் யாருக்கு உரிமையான சொத்து உள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதிகள் எந்த வருடம் சொத்தினை வாங்கினார்கள் என்றால் தெரியாது. வழக்கு சொத்தினை நான் வாங்குவதற்கு முன்னரே பிரதிவாதிகள' மேற்குபக்கம' உள்ள சொத்தினை 2013-ல் வாங்கிவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது.

**(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம்- 12.30 பி.எம்.**